# பின்வரும் நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளருக்கான அறிவித்தல்

- உரிமம் பெற்ற வங்கிகள்
- உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்
- காப்புறுதிக் கம்பனிகள்
- கொழும்புப் பங்குச் சந்தையின் பங்குத் தரகர்கள்

இலங்கை நிதியியல் உளவறிதற் பிரிவு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின்படி, மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் அவற்றின் வாடிக்கையாளர்களை அடையாளம் காணும் பொருட்டு குறிப்பிட்ட அடிப்படைத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தியது. தகவல் பின்வருமாறு:

- அடையாள ஆவணங்களின் பிரதிகள் (தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்)
- நிரந்தர வதிவிட/ வியாபார முகவரி
- தொழில் மற்றும் தொழில்தருநர்/ பெயர் மற்றும் வியாபாரத்தின் தன்மை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வருமானம்
- கணக்கினைத் திறப்பதற்கான காரணம்

நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர் பற்றிய தகவல்களையும் ஏனைய அடிப்படை விபரங்களையும் சேகரிப்பது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு நடைமுறையாகும். எனவே, இது விடயத்தில் அனைத்து வாடிக்கையாளர்களினது ஆதரவும் ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது.

இலங்கை நிதியியல் உளவறிதற் பிரிவு
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA